கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், வடமாகாணம்
සමූපකාර සංවර්ධන දෙපාර්තමේන්තුව උතුරු පළාත
DEPARTMENT OF CO-OPERATIVE DEVELOPMENT, NORTHERN PROVINCE
Kanniya Road,Varothaya Nagar, Trincomalee

Our Ref:- **NP/15/Cir** Your Ref:- 3 August 2010

**சுற்றறிக்கை இல. 01/2010**

சகல பல நோ.கூ.சங்கங்களின் தலைவர்களுக்கும்,
வடமாகாணம்.

## பொதுச்சபைப் பேராளர் எண்ணிக்கையினை நிர்ணயித்தல்

1972ம் ஆண்டின் 5ம் இலக்க கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் 11(1)ம் பிரிவின் கீழ் சங்கத்தின் உறுப்பினர் ஒருவர் விதி அல்லது துணை விதிகளால் விதிக்கப்படக்கூடியவண்ணம் பங்குப்பணம் செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு அமைய பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் உபவிதிக்கமைய ஒரு பங்கின் பெறுமதி ஒரு ரூபாவில் இருந்துவந்துள்ளது. பின்னர் ஒரு பங்கின் பெறுமதி ரூபா பத்து என உபவிதி மாற்றம் பல சங்கங்களினால் மேற்கொள்ளப்பட்டது.

1992ம் ஆண்டின் 11ம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டத்தில் 11(11அ) பிரிவின் படி ஒரு உறுப்பினர் 100/= பங்குப் பணம் செலுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் உறுப்பினர் ஒருவர் சேர்த்துக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருடம் கழியும் வரை வாக்களிப்பதற்கான அல்லது பதவியைக் கொண்டிருப்பதற்கான உரிமையை அனுபவித்தல் ஆகாது என குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டத்தின் 11(11ஆ) பிரிவின் படி ஒருவர் முழுமையான உறுப்பாண்மையை பெற்ற பின்னரே பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் ஏதேனும் கூட்டத்தில் வாக்களிக்கவும் அத்துடன் அத்தகைய சங்கத்தின் ஏதேனும் பதவிக்கு தெரிவு செய்யப்படவும் உரித்துரிமை உடையவராதல் வேண்டும்.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு வர்த்தமானிப் பத்திரிகை அதிவிசேடமானது 1028/6ம் இலக்கம் 19.05.1998ம் திகதியின் படி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பதிவு செய்யப்பட்ட உபவிதிகளின் 23ம் பிரிவின் பிரகாரம் கிளைக்குழுக்களை தெரிவு செய்வதற்கான விதிகள் ஆக்கப்பட்டுள்ளன. இதன் 3ம் பந்தியில் கிளைப் பொதுக்கூட்ட அறிவித்தல் கூட்டுறவுச் சட்டத்திற்கு அமைவாக தகுதி பெற்ற உறுப்பினர்களுக்கு அறிவித்தல் அனுப்பப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. 5ம் பந்தியில் கிளைப் பொதுச்சபை கூட்டத்தில் பங்கு பற்ற தகுதிபெற்ற உறுப்பினர்களின் பட்டியல் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் உபவிதி 22(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள வாக்காளர் பட்டியலாகக் கொள்ள வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது

மேற்படி சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய வாக்காளர் பட்டியல் ரூபா 100/= பங்கிற்கே தயாரிக்கப்பட்டு அதனடிப்படையில் கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் நடைபெறவேண்டும். இவ்விடயத்தில் பொதுச்சபை பிரதிநிதிகள் தெரிவில் தெளிவற்ற நிலை காணப்படுவதாக எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. ரூபா 1/=, ரூபா 10/=, ரூபா 100/= பங்கு உள்ளவர்கள் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ளனர். 100/= ரூபா பங்கினை முழுமையாக செலுத்தாத உறுப்பினர் ஒருவர் வாக்காளர் பட்டியலில் இடம்பெற முடியாது. இதற்கான கால அவகாசம் ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டது.

பல நோக்கு கூட்டுறவுச் சங்க உபவிதி 4.1.2ன் படி கிளை உறுப்பினர் தொகை பின்வருமாறு கணிப்பிடுதல் வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

$$\frac{\text{கிளை உறுப்பினர் தொகை} \times 100}{\text{சங்கத்தின் மொத்த உறுப்பினர் தொகை}}$$

இங்கு மொத்த உறுப்பினர் என்பது வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களையே குறிக்கும். மேற்படி வாய்பாட்டிற்கு அமையவே சங்கத்தின் பொதுச்சபைப் பேராளர் தொகை தீர்மானிக்கப்பட வேண்டும். பங்கினை முழுமையாக செலுத்தாதவர்களையும் உள்ளடக்கி பொதுச்சபைப் பேராளர் தெரிவு மேற்கொள்வது ஏற்புடையதல்ல. இவ்விடயமாக உறுப்பினர்களுக்கு தெளிவான அறிவுறுத்தல் வழங்கப்பட வேண்டும்.

☏-CCD & RCS – 026 3264646 Gen – 026 3264645 Fax – 026 2226951/4/6/7 – Ext - 241
E- mail :- ccdnp@mail.com

பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் துணைவிதிப்படி பொதுச்சபை பேராளர் எண்ணிக்கையினைக் கணிப்பீடு செய்கையில் இரு வழிமுறைகள் பின்பற்றப்படுவது எனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

01. ஒரு சில சங்கங்கள் ரூபா100.00 அல்லது அதற்கு மேல் பங்குப் பணம் செலுத்தியுள்ள உறுப்பினர்களினைக் கொண்டு வாய்ப்பாட்டிற்கு அமைய பேராளர் எண்ணிக்கையினைக் கணிப்பீடு செய்கின்றன.

02. வேறுசில சங்கங்கள் ரூபா 100.00இற்குக் குறைந்த பங்குப்பணம் செலுத்தியுள்ளவர்களினையும் உறுப்பினர் எனக்கணித்து வாய்ப்பாட்டிற்கு அமைய பேராளர் எண்ணிக்கையினைக் கணிப்பீடு செய்கின்றன.

இரண்டாவது வழிமுறையினூடாக, செயற்படும் உறுப்பினர்களுக்கு கிடைக்கப்பெறும் பேராளர் எண்ணிக்கையைவிட செயற்பாடற்ற உறுப்பினர்களை அதிகமாகக்கொண்ட கிளைகளுக்கு கூடுதலான பேராளர்கள் தெரிவுசெய்யப்படும் வாய்ப்பு உள்ளது. இதனைச்சீராக்கம் செய்வதற்கு பின்வரும்வகையில் செயற்படும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

01. உடனடியாக போதிய பகிரங்க அறிவித்தல் வழங்கி பங்குப்பணம் பூரணப்படுத்தாதுள்ள உறுப்பினர்களினை 2010.12.31ந் திகதிக்கு முன்னர் பங்குப்பணத்தினைச் செலுத்தி பூரண உறுப்பினராக்க மேலும் கால அவகாசம் வழங்கவும்.

02. முன்கூறிய கால அவகாசம் முடிவுற்ற பின்னர் பொதுச்சபை பேராளர் கணிப்பீட்டினை பூரண உரிமைபெற்ற உறுப்பினர்களின் அடிப்படையில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவும். அவசியமேற்படின் இதற்கமைவாகச் சங்கங்களின் துணைவிதியினைத் திருத்தம் செய்தல் வேண்டும்.

03. 01.01.2011ந் திகதியிலிருந்து ரூபா100.00இற்குக் குறைந்த பங்கினையுடைய அனைத்து உறுப்பினர்களும் தொங்கல் உறுப்பினர்களாகக் கணிக்கப்பட்டு இவர்களது பங்குப்பணமானது பங்கு மூலதனம் தொங்கல் என்ற தனியான கணக்கில் காட்டப்படல் வேண்டும்.

இப்பேராளர் தெரிவுவிடயம் தொடர்பில் முன்னர் வெளியிடப்பட்ட சுற்றுநிருபங்களில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன என்பதனை அறியத்தருகின்றேன்.

ஜே.எஸ்.அருள்ராஜ். O/C
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் (வ.மா)

பிரதி:-

01. தலைவர், செயலணிக்குழு, வடமாகாணம் - தகவலுக்காக.

02. செயலாளர், உள்ளூராட்சி நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு, கூட்டுறவு கிராம அபிவிருத்தி அமைச்சு, (வ.மா) – தகவலுக்காக.

03. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், முல்லைத்தீவு/யாழ்ப்பாணம்/கிளிநொச்சி/வவுனியா/மன்னார் – தகவலுக்காகவும் சங்கங்களுக்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்குவதற்குமாக.